**மெததும்பர பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மெததும்பர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு உரிய குறிப்புக்கள் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மெததும்பர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள்,

பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டில் ரூபா 3,241,804 இற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படாத 08 செயற்திட்டங்களுக்காக பிழையான முறையில் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நி.பி. 104(4) விசாரணை ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என. | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 20,376,960 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டிற்கான பெறுவனவு மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என. | சரியான வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 18,163 தொகை மற்றும் பலவினச் செலவுகள் ரூபா 475,739 தொகை ஆண்டிற்கான செலவுகள் என வரவு வைக்கப்படாமல் திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் ரூபா 493,602 தொகை செலவுகள் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக் கூற்றுக்கள் பிழைகளின்றி தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பொது வைப்புக் கணக்குகளின் மீதி துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதியிடையே இணக்கம் செய்த போது ரூபா 14,172,672 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | தீர்வொன்று பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசத்தை இனங்கண்டு கணக்குப் பதிவுகள் மேற்கொள்ள வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 7,112,061 இற்கான 03 சொத்து மீதி மற்றும் பொறுப்பு மீதி ஒன்றுடன் தொடர்பான காணி உறுதிகள் மற்றும் ஏனைய ஆவணங்கள், பௌதீக ரீதியாக உளமை மற்றும் பண்டக் கணிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 ஜுலை 08 ஆம் திகதி 2235/64 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் திருத்தம் | | | |
| | பந்தி 84 | அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் படி பூர்த்தி செய்யப்பட்டு வதிவதற்காக இணக்கச் சான்றிதழ் ஒன்று வழங்க வேண்டியிருந்த போதிலும், 2021 முதல் கடந்த ஆண்டு வரையான காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 141 விண்ணப்பங்கள் தொடர்பாக இணக்கச் சான்றிதழ் வழங்கியிருக்கவில்லை. | குறிப்பிட்ட தரப்பினருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டதென. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நி.பி. 104(3) மற்றும் 104(4) | அறவிடப்பட முடியாத வாகனத் தரிப்பிடக் கட்டணம், நீர்க் கட்டணம், ஊழியர் கடன், கடன்கொடுத்தோர் கடன்பட்டோர், சிக்கல் தன்மையுடைய 04 மீதிகள் தொடர்பாக குறிப்பிட்ட விசாரணைகளை பூர்த்தி செய்து ரூபா 4,108,899 தொகைக்கான நட்டத்தை அறவீடு செய்திருக்கவில்லை. | குறிப்பிட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | (ii) நி.பி. 571(3) | 2017 முதல் 2021 ஆண்டு வரையான காலம் தொடர்பாக காலவதியாகிய பலவின வைப்புக்களின் கூட்டுத்தொகை | நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 1,471,114 தொகையினை தீர்த்திருக்கவில்லை. | | |
| (இ) | 2010 நவம்பர் 24 திகதிய 05/2010 இலக்கம் கொண்ட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | தேவையான தகைமைகளை பூர்த்தி செய்திருக்காத பொது மக்கள் இணைப்படி உத்தியோகத்தர் ஒருவருக்கு 2018 முதல் மீளாய்வாண்டு வரை ரூபா 1,213,833 இற்கான கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது. | தவறுதலாக குறிப்பிட்ட கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கை அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 54,122,301 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 32,917,402 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 1,881,894 | 2,126,773 | 2,329,659 | 818,753 | 1,772,630 | 2,113,297 | 2,494,108 | 1,021,640 |
| ii. | வாடகை | 3,839,400 | 3,901,286 | 4,628,568 | 1,529,058 | 1,272,339 | 3,668,192 | 5,354,029 | 2,256,340 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,150,225 | 3,648,165 | 3,696,215 | - | 3,544,196 | 2,526,735 | 2,685,485 | 48,050 |
| iv. | ஏனைய வருமானங்கள் | 31,032,187 | 48,192,037 | 29,691,524 | 83,522,323 | 69,704,926 | 55,664,536 | 56,934,801 | 65,021,810 |
| | | 39,903,706 | 57,868,261 | 40,345,966 | 85,870,134 | 76,294,091 | 63,972,760 | 67,468,423 | 68,347,840 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 677,683 தொகை காணப்பட்டதுடன், ஒரு அலகின் வீதவரி நிலுவை ரூபா 5,000 ஐ மிகைத்துள்ள 08 ஆதனங்களின் கூட்டுத்தொகை ரூபா 85,138 தொகையாக இருந்தது. | ஆதனங்களை தடை செய்வதற்காக பகுப்பாய்வு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| **(ஆ)** | **கடை வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 1,529,057 தொகையாக காணப்பட்டதுடன், 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படுகின்ற ரூபா 1,075,621 இற்கான குத்தகை மீதியொன்று மற்றும் கடை வாடகை மீதியில் 03 – 05 இற்கும் இடைப்பட்ட காலத்தையுடைய காலம் தொடர்பான ரூபா 41,305 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | குறிப்பிட்ட தரப்பினரை அறிவுறுத்தி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | வருமானங்கள் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | தெல்தெனிய பொருளாதார நிலையத்தில் காணப்படும் 25 கடையறைகளுக்காக 2015 மார்ச் 02 திகதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கடை வாடகை அறவீடு செய்யப்பட்டு 08 வருடங்கள் கடந்திருந்த போதிலும், புதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றிருக்கவில்லை. | புதிய பெறுமதி மதிப்பீடு செயற்படுத்தப்படும் என. | புதிய பெறுமதி மதிப்பீட்டின் படி வாடகை அறவிடப்பட வேண்டும். |
| (iii) | வைத்தியசாலை சுற்றுவட்டப் பாதையின் 06 கடையறைகள் தொடர்பாக 1999 சபை பிரேரணை ஒன்றின் மூலம் திருத்தப்பட்ட வாடகை ஒன்று அறவிடப்பட்டிருந்ததுடன், 2019 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த புதிய பெறுமதி மதிப்பீட்டின் படி 2020 முதல் 2023 வரையான காலப் பகுதி தொடர்பாக ரூபா 415,298 இற்கான கடை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| **(இ)** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 538,038 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 35,129,755 தொகையாக இருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் தருவித்துக் கொள்ள வேண்டும். |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான 02 நீர் செயற்திட்டங்களில் மீளாய்வாண்டு மேற்கொள்ளப்பட்டிருந்த நீர் மாதிரி பரிசோதனை அறிக்கையின் படி ஈ கோலி (E Coli) பற்றீரியா செறிவு மற்றும் கொலிபோம் (Coliform) பக்டீரியா செரிவு சீரற்ற நிலைமையில் காணப்பட்டது. இது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 78 (1) இன் படி பொது மக்களின் சுகாதார பொறுப்பாளர் என சபை செயற்பட வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக கவனம் செலுத்தாமல் குடிப்பதற்கு பொருத்தமில்லாத அசுத்த நீர் பொதுமக்களுக்கு வினியோகிக்கப்பட்டுள்ளது. | சுகாதார விசாரணை ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என. | சுத்தமான நீர் வினியோகிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 93(ஆ) ஏற்பாடுகளின் படி பிரதேசத்திலுள்ள வீடுகளில் மலக் கழிவுப்பொருள் அகற்றுவதற்காக முறைப் பிரகாரம் கிடங்குகள் உரிய காலத்தில் சுத்தம் செய்தல் மற்றும் காலிசெய்வதற்கு முடியுமானவாறு சாக்கடை வண்டிச் சேவையொன்று நடாத்திச் சென்றிருக்கவில்லை. | அண்மையுள்ள உள்ளுராட்சி நிறுவனத்திலிருந்து தேவையான கருமங்கள் நிறைவேற்றப்படுகின்றது என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 09 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,470,887 தொகையாக காணப்பட்டதுடன், சமர்ப்பிக்கப்பட்டிருந்த காலப் பகுப்பாய்வின் படி 01 வருடத்திற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலம் தொடர்பான கணக்கு மீதிகள் கூட்டுத்தொகை ரூபா 4,542,105 தொகை மற்றும் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 4,572,290 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு, நி.பி. 104 விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 34,157,840 தொகையாக காணப்படுவதுடன், சமர்ப்பிக்கப்பட்டிருந்த காலப் பகுப்பாய்வின் படி 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்துக்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,357,500 தொகை மற்றும் 05 வருடங்களுக்கு மிகையான காலம் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 2,444,049 தொகையினை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |
| (இ) | 1989 – 2017 காலம் தொடர்பாக பெற்றுக்கொள்வதற்கான உறுதிப்பாடு காணப்படாத முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 8,283,993 தொகை மற்றும் 2011 – 2016 காலம் தொடர்பான நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 209,200 தொகை காணப்பட்டதுடன், குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து தருவித்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நி.பி. 104(4) விசாரணை செயற்படுத்தப்படும் என. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 17,850,000 இற்கான 07 வாகனங்கள் மற்றும் ரூபா 177,500 பெறுமதியான நீர் பவுஸர் ஒன்று 02 வருடம் முதல் 09 வரையிலான கால வீச்சில் விளைவற்று மற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 02 கடையறைகள் 2014 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை மூடி வைக்கப்பட்டிருந்திருந்தது. | வேறு ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்தப்படும் என. | ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்த வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படும் கப் வண்டியொன்றில் மற்றும் 02 ஜீப் வண்டிகளின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமையை உரித்தாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிமையை உரித்தாக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமாக காணப்படும் காணி கட்டிடங்களின் உரிமையை உறுதிப்படுத்தியிருக்காததுடன், 59 ஆதனங்களின் மற்றும் 24 சனசமூக நிலையங்களின் உரிமையினை உரித்தாக்கியிருக்கவில்லை. | உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிமையை உரித்தாக்க வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியை இணக்கஞ் செய்த போது அவற்றில் 10 பதவிகளுக்கான 22 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 08 மிகைகளும் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், அரசின் கொள்கைசார் தீர்மானங்களின் படி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் இணைத்தமையால் மிகை ஒன்று ஏற்பட்டிருந்தது என. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் படி குறிப்பிட்ட அலுவல்கள் மேற்கொள்ள வேண்டும். |

## 4 கணக்களிப் பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உட்படுத்தப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,120,000 இற்கான 06 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன், பாதீடு செய்யப்பட்டிருக்காத ரூபா 19,830,806 தொகைக்கான 12 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் காரணியொன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை. | குறிப்பிட்ட செயற்திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் போனது என. | பாதீடு செய்யப்பட்ட செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் விதிகளின் படி சபையினால் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளது என. | நிலைபேறான அபிவிருத்தி சுட்டிகளை இனங்கண்டு குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டும். |